கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.105/2021

நாள்.26.08.2025

வா.சா.1 – முத்துகிருஷ்ணன்
த/பெ – இராமசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) இராமசாமி நாடார் என்பவர் தங்கராஜிக்கு கிரையம் கொடுத்த போது நான் எங்கு இருந்தேன் என்றால் நான் வெளிநாட்டில் இருந்தேன், எனக்கு 2021 வருட இறுதியில் தான் எனக்கு கிரையம் கொடுத்தது தெரியவந்தது. இராமசாமி நாடார் என்பவர் தங்கராஜிடம் ரூபாய் 4 லட்சம் பணம் கேட்டவிவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தங்கராஜிடன் ரூபாய் 2 இலட்சம் இருப்பதாகவும், தபசில் சொத்தினை ரூபாய் 4 இலட்சத்திற்கு தங்கராஜிக்கு இராமசாமி நாடார் கிரையம் செய்து கொடுக்க சம்மதித்ததார் என்றால் சரியல்ல.

2) 1ம் பிரதிவாதி கையில் இருந்த பணத்தை 2ம் பிரதிவாதிக்கு அளித்துவிட்டு 2ம் பிரதிவாதி கோரிய மீத ரூபாய் 2 இலட்சம் தன்னிடம் இல்லை என்பதால் 1ம் பிரதிவாதி தங்கராஜிக்கு பாத்தியப்பட்ட வேறொரு நிலத்தை 2ம் பிரதிவாதிக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுக்கவேண்டும் என 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் கூறினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) இராமசாமி நாடார் கேட்டு கொண்டதற்கு இணங்க தங்கராஜி பழவூர் பகுதி II கிராமம் சர்வே எண்.495/2 ல் 56 செண்ட் நிலத்தினை 2ம்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.26 18:06:37 +0530

பிரதிவாதி இராமசாமி நாடாரின் மனைவி ஜெயக்கனிக்கு 29.12.2024 தேதியில் கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராமசாமி நாடார் என்பவர் தங்கராஜிக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணமும், தங்கராஜ் ஜெபக்கனி என்பவருக்கு ஏற்படுத்திய கொடுத்த ஆவணமும் அடுத்து அடுத்து பதியப்பட்ட ஆவணங்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்கள் ஒரே தேதியில் அடுத்து அடுத்து பதியயப்பட்ட ஆவணங்கள் என்பதாலும் வாதிக்கு தபசில் சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

4) பிராது தபசில் சொத்தானது தில்லை சிதம்பரநாடாரின் பூர்விக சொத்து என்பதால் இராமசாமி நாடார் தங்கராஜிக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணம் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல, என் பாட்டி எழுதிய உயிலின் மூலம் எனக்கு பாத்தியப்பட்டதாகும். பிரதிவாதி கிரையம் பெற்ற 18 வருடங்கள் கழித்து அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிக்கும் நோக்கத்தோடு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தபசில் சொத்தை பிரதிவாதியும் கூட்டாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. கூட்டு பட்டாவில் பிரதிவாதியின் பெயர் உள்ளது என்றால் சரிதான். கூட்டு உரிமையாளர் மீது உறுத்து கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

5) பிராது தபசில் சொத்து போக தில்லை சிதம்பர நாடாருக்கு வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் வேறு சொத்துக்களுக்கும், இவ்வழக்கு சொத்திற்கு சம்பந்தம் கிடையாது. தில்லை சிதம்பர நாடார் அனைத்து சொத்துக்ளை உள்ளடக்கி நீங்கள் பாகபிரிவினை வழக்கு தான் தாக்கல்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.26 18:06:42 +0530

செய்யவேண்டும் தவிர நிலையுறுத்து கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எனது தந்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தது தொடர்பாக அவர்கள் மீது குற்றநடவடிக்கை ஏதும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நானும் எனது தகப்பனாரும் தான் திட்டமிட்டு சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

6) 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய ஆவணத்தை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரம் ஆனது காலவறையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ளள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் அசல் தற்போது யாரிடம் உள்ள என்றால் என் தகப்பனாரிடம் உள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின் சாட்சிகளை விசாரிக்க நான் தயாராக உள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் சாட்சிகளை விசாரிக்காமல் அதன் உண்மைதன்மை தெரியாது என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட கூடியது என்றால் சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.26 18:06:47 +0530